# தமிழ் இளையோர் அமைப்பு
# Tamil Youth Organization

13.06.2023
ஊடக அறிக்கை
உரிமைக்காக எழுதமிழா 2023

**தமிழின அழிப்பிற்கு நீதிகேட்டு,ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழம் விடுதலை அடையும்வரை** “உரிமைக்காக எழுதமிழா” என்ற கோசத்துடன் தமிழ் இளையோர் அமைப்பினால் 12.06.2023 அன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டமானது பெல்சியம் தலைநகர் புறுசலில் அமைந்துள்ள பூங்காவில் ஆரம்பித்து, பறைஒலிகளுடன் உணர்வெழுச்சியோடு மக்கள் தமிழீழத் தேசியக்கொடியினை தாங்கியவாறும் எங்களுடைய வேண்டுகைகளை பதாதைகள் மூலம் வெளிப்படுத்தியவாறும் பூங்காவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய முன்றல் வரை, கொட்டொலிகளை எழுப்பியவாறு மக்கள் பேரெழுச்சியுடன் உணர்வோடு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். இவ் போராட்டத்தை வேற்றினமக்கள் உணர்வோடு உன்னிப்பாக அவதானித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாபெரும் போராட்டத்தில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு, தமிழீழத் தேசியக் கொடியினை தாங்கியவாறு எமது உரிமைகளை முழக்கமாக எழுப்பியதோடு, எமது தேவைகளை பதாகைகளூடாக வெளிப்படுத்தி, உணர்வெழுச்சியோடு சுட்டெரிக்கும் வெயிலின் மத்தியில் ஐரோப்பிய முன்றலில் போராட்டத்தில் மக்கள் கலந்துகொண்டமையானது, தமிழர்களாகிய எமக்கு என்ன தேவை என்பதை அனைத்துலக நாடுகளுக்கு தெளிவாக எடுத்தியம்பிநிற்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தினை பேரணி சென்றடைந்ததும் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, பின்னர் தமிழீழத்தேசிக்கொடி ஏற்றப்பட்டு, அதனைத்தொடர்ந்து பெல்சியம் நாட்டின் தேசியக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து மாவீரர் திருவுருவப்படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதோடு, மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து அகவணக்கம் மற்றும் உறுதிமொழி இடம்பெற்றது. உறுதிமொழி நடைபெற்றபோது இளையோர்கள் அனைவரும் மேடையில் உணர்வோடு பங்கெடுத்திருந்தனர்.

அடுத்து, இன்றைய போராட்டம் தொடர்பான சிறிய தொகுப்பு தமிழிலும், சர்வதேச சமூகத்தை நோக்கிய ஈழத்தமிழர் பேரவை ஐக்கிய இராச்சியத்தின் வேண்டுகோள் உரை ஆங்கில மொழியிலும் ஆற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து வேற்றினத்தவர் உரை திரு.டென்னிஸ் ஸ்சோர்ட்ஸ் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து பிரித்தானியா கலைபண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் கருத்தூட்டல் மிக்க விழித்தெழு தமிழா என்ற தலைப்பில் சம்பாசனை சிறப்பாக அமைந்திருந்தது. சிறப்புரை மற்றும் பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் யேர்மன் மொழிகளில் உரைகள் வழங்கப்பட்டது.

இறுதிநிகழ்வுகளாக பிரகடனம் வாசித்தல் மற்றும் பிரித்தானியா கலைபண்பாட்டுக்கழகத்தின், உணர்வேற்றுகின்ற எழுச்சி நடனம் நடைபெற்றது. இறுதியாக தமிழீழ தேசியக்கொடி மற்றும் பெல்சியம் நாட்டின் தேசியக்கொடி கையேற்றலுடன் **நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்** என்ற உரமேற்றல் பாடல் இசைக்க தமிழீழத் தேசியக்கொடிகளைக் கரமேந்தி இளையோர்கள் உணர்வெழுச்சிகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

தமிழீழதேசம் விடுதலை அடையும்வரை எத்தடைவரினும் அத்தடைதகர்த்து, மாவீரர்கள் காட்டிய பாதையில் அவர்கள் ஈகங்கள் வழிநின்று, தமிழீழத் தேசியத்தலைவரின் வழிகாட்டலில் தொடர்ந்தும் போராடுவோம் என்ற, அறிவிப்பாளர்களின் உணர்வின் வரிகளோடு உறுதியெடுத்து தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் என்ற உரத்த பேரொலியோடு உரிமைக்காக எழுதமிழா போராட்டம் நிறைவுபெற்றது.

தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டமானது, சமகாலத்தில் ஒரு செய்தியை சொல்லிநின்றதோடு, தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்போராட்டம் எம்இளையோர்களால் வீச்சோடு கொண்டு செல்லப்படும் என்பதை கட்டியம் கூறிநிற்கின்றது.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.”